Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 17-5-1985 வெள்ளிக்கிழமை (வைகாசி 4 ஷஃபா 26) முழக்கம் 101

## திருமலையில் ஊரடங்கை மீறிய மூவர் சுடப்பட்டு மரணம்!

நேற்று முன்தினம் இரவு ஊரடங்குச் சட்டத்தை மீறிய மூவர் பாது காப்புப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் திருமலை நகர சபையின் ஐ.தே. கட்சி உறுப்பினரான கொசுவன் சிறி என்று அழைக்கப் படும் மாணிக்கவாசகர் (38 வயது); கட்சியின் மற்றொரு ஆதரவாளரான துரை ரெத்தினம் (43 வயது); பொலிஸ் உத்தியோகஸ்தரான நகுலேஸ்வரன் ஆகியோரே இவ்வாறு மரணமானவர்களாவர். சம்பவநேரத்தில் நகுலேஸ்வரன் கடமையிலில்லாததால் சாதாரண உடையிலேயே இருந்தார். செவ்வாய்க்கிழமை முதல் திருமலையில் மாலை ஏழு மணி முதல் மறுநாள் காலை ஐந்து மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்படுவது தெரிந்ததே.



## அண்ணா தொகுதியில் கருணாநிதி கைது!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாரத அரசு எடுத்து வரும் நடவடிக்கை மேலும் வலுவடையவேண்டும் எனக் கோரி திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி வரும் மறியல் போராட்டத்தின் நேற்றைய நிகழ்ச்சியின்போது கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில்வைக்கப் பட்டுள்ளார்.

தி மு. க ஸ்தாபகரான அறிஞர் அண்ணாதுரை சட்டசபையில் நீண்ட காலமாக அங்கத்துவம் வகித்த காஞ்சிபுரம் தொகுதியில், நேற்று மறியல் போராட்டத்துக்கு தலைமை தாங்கிச் சென்ற போது மற்றும் 247 பேருடன் சேர்ந்து கலைஞர் கைதானார்.

முன்னாள் மநில அமைச்சர் திரு. அண்ணாமலை, சட்டசபை உறுப்பினர் திரு சி ஆறுமுகம், சட்டசபை முன்னாள் உறுப்பினர் துரை முருகன், தி மு.க.முன்னாள் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு தண்டபாணி ஆகியோரும் நேற்றுக் கைதானோரில் அடங்குவர்.

கடந்த மாதம் 29ம் திகதி ஆரம்பமானமறியல் போராட்டத்தில் பங்குபற்றிய சுமார் பதினையாயிரம் பேர் ஏற்கனவே தடுப்புக்காவலில வைக்கப்பட்டுள்ளனர்.

# தீவிரவாதிகளால் வில்பத்துவில் கடத்தப்பட்ட இருவர் விடுதலை!

## அனுராதபுரத்தில் இருபத்தேழு சடலங்கள் அடையாளம் காணப்படாமல் அடக்கம்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் தாக்குதலின் பின்னர் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் வில்பத்து வனவிலங்கு பாதுகாப்புப் பகுதி ஊழியர்கள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களைக் கடத்திய தீவிரவாதிகள் நிபந்தனை எதுவுமின்றி விடுவித்தனராம்.

அதேவேளை, அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்படாது வைக்கப்பட்டிருந்த இருபத்தேழு சடலங்களை அரசாங்க செலவில் அடக்கம் செய்வதற்கும் நேற்று ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

அனுராதபுரம் தாக்குதலை அடுத்து நடைபெற்ற பதில் தாக்குதலின் போது மரணமானவர்களின் சடலங்களாக இவை இருக்கலாமெனவும், இவர்களில் அனேகமானவர்களும் வடபகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமெனவும் நம்பப்படுகின்றது.

இந்தச் சடலங்களை உறவினர்கள் எவரும் அடையாளம் காட்டச் செல்லாததால்இவைகளை அரச செலவில் அடக்கம் செய்ய முடிவுஎடுக்கப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்பட்டது.

## மட்டுநகரில்

(மட்டுநகர்)

வாழைச்சேனையில் நேற்று பத்து வீடுகள் தீக்கிரையாகின. வந்தாறுமூலையில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி சடலங்கள் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன,

## அனுராதபுரம் சம்பவம்; "ரெலோ" மறுக்கிறது

அனுராதபுரத்தில் சிங்கள மக்களுக்கு எதிராக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல் தங்களால் மேற்கொள்ளப்படவில்லை என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இங்கு மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இவ்வாறான சாதாரண சிங்கள மக்களுக்கெதிரான தாக்குதல்களை முற்றாக நிராகரிக்கின்ற நாம் இவ்வாறான தாக்குதல்கள் சர்வதேச ரீதியில் எமது விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான கண்ணோட்டத்தையே ஏற்படுத்தும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

நிச்சயமாக எமது போராட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நேற்றைய ஹர்த்தால்

சமூக விரோதச் செயல்களைக் கண்டிக்குமுகமாக பூரண ஹர்த்தால் நடத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புகையிரத நிலைய ஊழியர் சடலங்கள் இன்று யாழ் வரும்

அனுராதபுரத்தில் கொலை செய்யப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியர்கள் ஏழு பேரின் சடலங்களையும் இன்று அவரவர் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் இச்சடலங்கள் நேற்று மாலை பாதுகாப்பாக வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை அனுராதபுர அரசாங்க அதிபர் பொறுப்பேற்றிருந்தார்.

அங்கிருந்து லொறியொன்றில் ஏழு சடலங்களையும் இங்கு கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது.

அதேவேளையில் அனுராதபுரத்தில் பல்வேறு அலுவலகங்களிலும்கடமையாற்றியசுமார்

—4-ஆம் பக்கம் பார்க்க

## மூவர் விடுதலை

(மானிப்பாய்)

கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் வைத்துக் கைதானவர்களில் ஒருவரைத் தவிர மிகுதி மூவரும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். சுதுமலையைச் சேர்ந்த வெற்றிவேலு என்றஇளைஞரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவர்.

# நெடுந்தீவு சம்பவத்தில் 18 ஆண்கள் 13 பெண்கள் கொலையுண்டனர்

## சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தன

நேற்று முன்தினம் நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவானுக்கு வந்த படகில் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட முப்பத்தொரு பேருடைய சடலங்கள் நேற்று நண்பகல் யாழ் பெரியாஸ்பத்திரி சவச்சாலைக்கு கொண்டு வரப்பட்டன.

இதில் 18 பேர் ஆண்கள். மிகுதி 13 பேரும் பெண்களாவர். இவர்களில் 30 பேருடைய சடலங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க பெண் ஒருவருடைய சடலம் அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காணப்பட்டுள்ள 30 பேருடைய பெயர் விபரம் வருமாறு:-

செபமாலை அந்தோனிப்பிள்ளை (45) ட்றைவர், ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம் (45) ராமன் முருகன் (52), சின்னவன் அந்தோனி (65), நிமிலி (பெண்-18), இராமநாதன் மகன் (16), பசுபதி நிர்மலாதேவி (20), பேர்னுட் இறைபூரணம் (22), கரையூர், சின்னையா (35), மயிலங்குளம், வெ. கந்தையா (44), செ. சந்திரகுமார் (30), தருமலிங்கம்

— 4ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வர்த்தகர்கள் முருகேசு, குமாரசாமி நேற்று விடுதலையாகினர்!

இம்மாதம் 7ம் திகதி இரவு நல்லூரிலுள்ள இல்லத்தில் வைதது்க் கடத்திச் செல்லப்பட்ட யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. எஸ். வி. முருகேசு நேற்றிரவு 8மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

வாகனமொன்றில் இவரைக் கொண்டுவந்து வீட்டில் இறக்கி விட்டதாகத் தெரியவந்துள்ளது தம்மைக் கூட்டி வந்தவர்களை திரு. முருகேசு வீட்டிற்கு அழைத்து குளிர்பானம் வழங்கி உபசரித்தார்.

தங்கள் அப்பாவை விடுவிப்பதற்கு உதவிய அனைவருக்கும் திரு. முருகேசுவின் பிள்ளைகள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்,

இம்மாதம் 11-ம் திகதி நாவலர் வீதயிலுள்ள வீட்டில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட பிரபல ஜவுளி வர்த்தகர் த. குமாரசாமியும் நேற்றுக் காலை 5 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார்.

— 4ஆம் பக்கம் பார்க்க

## சவான் தலைமை இலங்கை விவகாரக் குழு இராமேஸ்வரம் செல்லும்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆராய இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தலைமையில் அமைக்கப்பட்ட குழு விரைவில் ராமேஸ்வரம் பகுதிகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் முகாம்களிற்குச் சென்று விசாரணைகளை மேற் கொள்ள விருப்பதாக தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. அந்தனி நேற்றுத் தெரிவித்தார்.

இக்குழுவினர் விஜயம் செய்யவுள்ள திகதி பற்றி இன்னும் சில தினங்களில் அறிவிப்பதாக அமைச்சர் சவான் தமிழக அரசுக்கு அறிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சில தினங்களுக்கு முனனர் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தபோது, விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## சுடப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம் அச்சேரியடி ரயில் பாதைக்கு அருகிலுள்ள

— 4ஆம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் நால்வர்

நெடுந்தீவு – குறிகட்டுவான் படகு தாக்கப்பட்ட சம்பவத்தில் காயமடைந்த ஏழுமாத பெண் குழந்தை ஒன்று உட்பட நான்கு பேர் புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

என்ஜின் சாரதி எஸ். தேவ

—4-ஆம் பக்கம் பார்க்க

### அசம்பாவிதங்களை அடுத்து

## கொடிகாமம் பகுதியிலுள்ள பாடசாலைகள் இயங்கவில்லை

(மிருசுவில்)

கொடிகாமத்தில் நடந்த சம்பவங்களை அடுத்து இப்பகுதியிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மாணவர் வரவின்றிக் காணப்படுகின்றன. ஒருசில ஆசிரியர்களே சமுகமளித்திருந்தனர்.

வழமையாக கலகலப்பாகக் காணப்படும் கொடிகாமம் சந்தை சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது. இங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையமும் தீக்கிரையாக்கப்பட்டு விட்டதினால் இக்கிளையினூடாக தமது பங்கீட்டுப் பொருட்களைப் பெற்றுவந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சார விநியோகமும் சில தினங்களாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. கண்டி வீதியில் காணப்பட்ட பாரிய குழி இளைஞர்களால் நிரவப்பட்டுள்ளது.

## வடமராட்சி அகதிகள் பலர் ஆழியவளை பகுதியில் தஞ்சம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, இன்பருட்டி பகுதிகளில் சமீபத்திய வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் உடன் பிறந்தவர்கள், பெற்றோர், மற்றும் உறவினர்களையும் வீடு முதலான சொத்துக்களையும் இழந்த நிலையில் நாகர்கோவிலில் இருந்து ஆழியவளை வரையுள்ள பல கிராமங்களிலும் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

பலர் பாடசாலைகளிலும், கோயில்களிலும் தங்கியுள்ளனர். பொது மக்கள் அவர்களுக்குத் தேவையான உணவு முதலான வசதிகளைச் செய்து வருகின்றனர்.

ஆத்திரம், அழுகை, சபதமெடுத்தல் என்பன ஏககாலத்தில் அவர்களிடம் காணப்படுகின்றன.

## தீவுப் பகுதி மக்கள் வங்கி கிளையில் இரவுநேர கொள்ளை

(ஊர்காவற்றுறை)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையிலுள்ள பொருட்கள் சில ஆயுதம் ஏந்தியவர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இங்கு காவலுக்கிருந்த இரவுக் காவலாளிகள் மேற்படி சம்பவம் பற்றித் தெரிவித்துள்ள தகவலில் இரவு சுமார் 9–00 மணியளவில் ஆயுதத்துடன் வந்தவர்கள் தம்மை அசையாமல் குப்புறப்படுக்கச் சொன்னதாகவும், சிலர் தமக்குக் காவலாக நிற்க, இருவர் உள்ளே சென்று ஒரு ரைப்பிரைட்டர் மூன்று அடிற்மெஷின் முதலியவற்றை எடுத்துச் சென்றதாகவும் தெரிவித்துள்ளனர்.

''பல தடவைகள் இழுத்து மூடும் சந்தர்ப்பங்கள் வந்த பொழுதும், தீவுப் பகுதி மக்களின் நலன் கருதி போராடி, தொடர்ந்து இயங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து அப்பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றோம். எனவே சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் நலன்கருதி எடுத்துச் சென்ற பொருட்களை மீள ஒப்படைக்குமாறு வங்கியின் முகாமையாளர் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

### வடபிராந்திய

## தபால் அத்தியட்சகரின் கந்தோர் இடம்மாறுகிறது

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இனம் தெரியாத இளைஞர்களின் பாதிப்புக்குள்ளான யாழ் மாவட்ட, வடபிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகம் மீண்டும் மணிக்கூட்டு வீதியிலுள்ள அதே பழைய கட்டடத்தில், இயங்க இருக்கின்றது.

பாதிப்புக்குள்ளான நாள் முதல் யாழ். அஞ்சலக மேல் மாடியில் இயங்கி வந்த இந்த அத்தியட்சகர் அலுவலகங்கள் அதிவிரைவில் மீண்டும் பழைய கட்டடத்திற்கு மாற்றப்படவிருக்கின்றன.

தற்போது நிலவும் பாதுகாப்பின்மை கருதியே இந்த அவசர நடவடிக்கை என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புதிய நிர்வாகிகள்

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம்:–

தலைவர்: திரு. க சண்முகநாதன் உப தலைவர்: திரு. எஸ். துரைராசா செயலாளர் திரு. க. நடராசா உப செயலாளர் திரு. ந. சர்வானந்தன் பொருளாளர் திரு. எஸ் சுதாகரன் உப பொருளாளர்: திரு. வ. நந்தகுமார் செயற் குழு உறுப்பினர்கள்; திரு. வி. தவராஜா திரு. ம. ரவீந்திரராஜா திரு. சி. சிவஞானம்.

மேற்படி கூட்டத்தில் கல்வி பயிலாத செவிப்புலனற்றோரையும் நட்புறவு நிலையத்தில் அங்கத்தவராக சேர்ந்து நிலையத்தை முன்னேற்றுமாறு போஷகர் திரு. க. சோபாலகிருஷ்ணன், தலைவர் திரு, க. சண்முகநாதன் ஆகியோர் கேட்டுக் கொண்டார்கள்.

## ஆஸி. பயணம்

(நல்லூர்)

தென்னிந்தியதிருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீன உடுவில் திருச்சபையில் சேகரக் குருவாகப் பணிபுரிந்த அருட் திரு. எஸ். என். சுகுணானந்தன் அடிகளார் ஒருவருட விடுமுறையில் குடும்பத்துடன் அவுஸ்ரேலியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

இவர் யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தின் செயலாளராகவும், தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அட்தியட்சாதீனத்தின் செயலாளராகவும் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காரணம் இதுதான்

1983 ஜூலையில் நடைபெற்ற இனக்கலவரம் போன்ற சம்பவத்தை மீண்டும் தூண்டிவிடுவதே அனுராதபுரச் சம்பவங்களால் தீவிரவாதிகள் எடுக்கும் முயற்சி என்று ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

## வேண்டுகோள்

காரைநகர், கொடிகாமம், மீசாலை வடக்கு அகதிகளுக்காக உடுபுடவைகள் தேவைப்படுவதாகவும், இவற்றை ஒப்படைக்க விரும்புவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழ் பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஒன்பது பேருக்கு வீர அஞ்சலி

(மிருசுவில்)

கொக்காவிலில் மரணமடைந்த 9 பேருக்கும் அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளை 'ரெலோ' இயக்கத்தினர் ஒட்டியுள்ளனர். வீர மரணம் அடைந்த வீர மறவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி என எழுதப்பட்டுள்ள அச்சுவரொட்டியில் இறந்த 9 பேரினதும் விபரம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்ரன் மிசோராம் (காரைநகர்) லெப்டினன்ட் குமார் (வவுனியா), லெப்டினன்ட் வீனஸ் (மன்னார்), ஜெரால்ட் (புதுக்குடியிருப்பு), பரன் (ஊர்காவற்றுறை), அஜர் (நெல்லியடி), ரவி (வேலணை), பபா (கல்வியங்காடு), பாலசிங்கம் (துணுக்காய்) ஆகியோராவர்.

## செஞ்சிலுவை சங்கம் உதவி

(கல்வியங்காடு)

பாதுகாப்புப் பிரிவின் தேடுதல் நடவடிக்கையின் போது தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் தமது குடும்பத்தலைவர்களை இழந்து தவிக்கும் இரண்டு வறிய குடும்பங்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் விபரங்கள் கோரியிருந்தது.

இதன்படி நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதனால் இரண்டு வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு விபரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## வட்டக்கச்சியில் சமூகவியல் மன்றம்

(பரந்தன்)

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் நலனை முன்னிட்டு சமூகவியல் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

வித்தியாலய அதிபர் திரு. வி. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சமூகசேவை உத்தியோகத்தர் பொன். நித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## 13வது வருடமும் சம்பியனானது

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான போட்டியில் தொடர்ச்சியாக பதின்மூன்றாவது தடவையும் சித்தன் குறிச்சி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 114.5 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. கடந்த சனி அன்று பூநகரி விளையாட்டு ஒன்றியக் குழு உப தலைவர் பொ. முருகவேள் ஒலிம்பிக் விளக்கேற்றி சத்தியப்பிரமாணம் செய்ததுடன் ஆரம்பமான இப் போட்டியில் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராககலந்து சிறப்பித்தார்.




✳ உடுப்பிட்டி, பேரின்பநாதன் செல்வராணி தம்பதிகளின் மகள் யசோதா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஏழாலை மேற்கு, குமாரசாமி வத்சலாதேவி தம்பதிகளின் மகள் தர்மினி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ அரியாலை, பெஞ்சமின் திரேஸ் தம்பதிகளின் மகன் அன்ரன் ஜெயதேவன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கந்தர்மடம், லோகேஸ்வரன் தனேஸ்வரி தம்பதிகளின் மகன் பிறேம்தாஸ் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## மல்லாகத்தில் இரு வேலைக்கு ஆறு லட்சம் ரூபா ஒதுக்கீடு

(அளவெட்டி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு புதிய ஒரு கட்டடத்தை அமைப்பதற்கென 1985-ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் ரூபாவும், மல்லாகம் மக்களின் மின்சார தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் உப மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நான்கு இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளது.

மேலும் மல்லாகம் உப அலுவலகப் பகுதிக்குள் அமைந்துள்ள அளவெட்டி கிராமத்தில் உள்ள சுடுகாடு திருத்த வேலைக்காக உள்ளூராட்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இருபதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. மா. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

### அதிபர் பாராட்டுகிறார்

## போற்றற்குரிய அரும்பணி ஆற்றுபவர் சிமியாம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

''பின்தங்கிய பாடசாலை, பிரபலமான பாடசாலை என்ற வேறுபாடின்றி சகல பாடசாலைகளும் சரிசமமாக முன்னேற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயற்படுபவர் எமது கல்விப் பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை'' என்று யாழ். வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபைப் பொதுக் கூட்டத்தில் அதிபர் திரு. கா. கணேசதாசன் பேசுகையில் பாராட்டினார்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் ஏனையோருக்கும் அதிபர் தனதுரையில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

செயலாளர் திரு. க. சிவகுரு பேசுகையில் இப் பாடசாலை மாணவர்கள் திறமை மிகப் பெற்றவர்கள் பல போட்டிகளில் வட்டார ரீதியில் சாதனை புரிந்திருப்பவர்கள் என பெருமிதத்துடன் கூறினார்.

பொருளாளர் திருமதி பொ. சதாசிவம் அறிக்கை சமர்ப்பித்தார்.

## வீடு சீரமைப்பு

(அரியாலை)

அரியாலை, நெடுங்குளம் அசம்பாவிதத்தில் முற்றாக எரிந்த ஓலை வீடுகளில் இரண்டை புனரமைத்துக் கொடுக்க அரியாலை அபிவிருத்திச் சங்கம் முன்வந்துள்ளது.

## சேதமடைந்தது

(ஊர்காவற்றுறை)

அண்மையில் காரைநகர் அசம்பாவிதத்தினால் ஊர்காவற்றுறை துறைமுக தங்குமிட மண்டபம் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. பீரங்கித் தாக்குதலினால் மேற்படி மண்டபம் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## நற்சான்றிதழ் பத்திரத்துக்கு தட்டுப்பாடு

(கல்வியங்காடு)

நற்சான்றிதழ் வழங்குவதற்காக கிராம சேவை அலுவலர்களால் பயன்படுத்தப்படும் நன்சான்றிதழ் பத்திரங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல கிராம சேவையாளர்களிடம் இல்லை எனத் தெரிய வருகிறது. கடவுச்சீட்டுஎடுப்பதற்காகவும் மற்றும் பல அத்தியாவசிய தேவைகளுக்காகவும் நற்சான்றிதழ் பெறுவதற்காக கிராம சேவையாளர்களிடம் செல்லும் பலருக்கு நற்சான்றிதழ் பத்திரங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வு பெறுகிறார்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் கனிட்ட பிரிவு அதிபராகக் கடமையாற்றிய திரு. சோ. சேனாதிராசா இம்மாதம் பதின்நான்காம் திகதிமுதல் தமது சேவையினின்றும் ஓய்வுபெற்றுள்ளார். திரு. கே. ரி. தர்மலிங்கம் இவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## இலங்கை வங்கி புதிய காசோலை

காசோலைகளில் நடைபெறும் மோசடிகளை தடுப்பதற்காக இலங்கை வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு புதிய குறுக்கிடப்பட்ட (குரொஸ்) விசேஷ காசோலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அண்மைக் காலமாக தபால் மூலமாக அனுப்பப்படும் காசோலைகளில் பெருமளவு திருட்டுப் போவதாகவும், சில காசோலைகள் அழிக்கப்பட்டு மாற்றப்படுவதாகவும் கிடைத்த புகார்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'மாற்றம் செய்யப்படலாகாது' என்ற பதத்தைக் கொண்ட இப்புதிய விசேஷ காசோலை அழியாத மையினால் அச்சிடப்பட்டுள்ளது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

வரி விளம்பரம்

விற்பனைக்கு

உடன் விற்பனைக்கு நாஷனல் டெக்செற் (R. X 45) 40 வாட்ஸ் ஸ்பீக்கருடன் கசற் றக்கோடர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 44, சங்கிலியன் வீதி, நல்லூர்.

உதயன்

உதய சிந்தனை

முட்டாள்களின் மத்தியிலே ஆளுபவனின் கூச்சலைவிட, அறிவாளிகளின் வார்த்தைகள் அமைதியுடன் அதிகம் கேட்கப்படுகின்றன.

--பைபிள்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

17-5-1985 வெள்ளிக்கிழமை (குரோதன வைகாசி 4)

# வல்வெட்டித்துறை முதல் நெடுந்தீவு வரைக்கும்

தமிழ்ப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆரம்பமான படுகொலைகள், இப்போது கூட்டுமொத்தமாக நடத்தப்படும் உச்சநிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தீவிரவாதிகளை வேட்டையாடுதல் என்ற பெயரில் ஆரம்பமான நடவடிக்கை, வனவிலங்குகளைக் கொன்று குவிப்பது போன்ற ஒரு நிலைக்கு இன்று வந்து கொண்டிருக்கின்றது.

கசாப்புக் கடையில் கூட இவ்வாறு நடைபெறுமா என்று மூக்கின்மேல் விரலை வைக்கும் நிலைக்கு வடபகுதிச் சம்பவங்கள் இப்போது வளர்ந்துள்ளன.

'போர் என்றால் போர்'என்று அன்றொருநாள் அவர் ஒருவர் சொன்ன ஞாபகம் இப்போது வருகின்றது.

வல்வெட்டித்துறையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் போர் பிரகடனமா?

விசாரணைக்காக வீடுகளிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களை கட்டடங்களுக்குள் நிறுத்தி வைத்து, சித்திரகுப்தனின் பட்டியலை வாசித்து முடித்துள்ளதை என்னென்று அழைப்பது?

ஆறு பாடசாலை மாணவர்களும் இவ்வாறு உயிர் பறிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

சனசமூக நிலையக் கட்டடமொன்றுக்குள் இருபத்தைந்து பேர்; கைசேர்த்துக் கட்டப்பட்டபடி பன்னிரண்டு பேர். இவ்வாறு மொத்தம் 77 பேர் மரணதேவனிடம் காவலுக்கு வந்தவர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வல்வைப் பிரஜைகள்குழு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியது. வடபகுதி பாதுகாப்பு அதிகாரிகளை நேரில் சந்தித்து விளக்கியது.

பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அவசர கடிதம் அனுப்பியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் திரு. ஆலாலசுந்தரம், ஜனாதிபதிக்கு தந்தி அனுப்பினார்.

பறிக்கப்பட்ட உயிர்களை மீட்டுத் தருமாறு இவர்கள் கேட்கவில்லை, உயிரைப் பறித்தவர்களுக்கு மரணதண்டனை விதிக்குமாறு இவர்கள் கேட்கவில்லை.

நீதி விசாரணையையே கேட்டார்கள்; இனிமேல் இவ்வாறு நடவாது பார்த்துக் கொள்ளுமாறு மட்டும் கேட்டார்கள்.

கடிதங்கள், மகஜர்கள், தந்திகள் 'கிடைத்தது' என்று கூட ஒரு பதில் இல்லை.

''இந்தப் புகார்களில் உண்மையில்லை'' என்று பொறுப்பு வாய்ந்த ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் செய்தி வந்துள்ளது.

அதனைக் கூட பெரிதுபடுத்தாது விடலாம். ஆனால் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடவாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு விடுத்த வேண்டுகோளாவது ஏற்றுக் கொள்ளப்பட்டதா?

நேற்று முன்தினம் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்கு தமிழ்ப் பிரயாணிகளுடன் வந்த படகுக்கு நேர்ந்த கதி இதற்கு விடையளிக்கும்.

நடுக்கடலில் வள்ளத்தை மறித்து உள்ளே சென்ற காற்சட்டைக் காரர்கள், ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என்று பாராமல் அனைவரையுமே கோரமாக வெட்டிச் சரித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி கல்நெஞ்சையும் கரைய வைப்பதாகும்

இதுவரை கிடைத்த தகவல்களின்படி 33 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கண் கொண்டு பார்க்க முடியாத நிலையில் வெறியாட்டம் நடத்தியவர்கள் நரபலி எடுத்திருக்கிறார்கள்.

காலையில் படகில் கால் எடுத்து வைக்கும்போது தமக்கு இவ்வாறான ஒரு முடிவு ஏற்படுமென அவர்கள் எண்ணியிருப்பார்களா?

துடிதுடித்து இறந்த நான்கு வயதுப் பெண் குழந்தையும் தீவிரவாதியா?

ஆஸ்பத்திரியில் படுகாயத்துடனுள்ள 29 பேரும் பயங்கரவாதிகளா?

அனுராதபுரம் சம்பவத்தை சிலர் சாட்டாகக் கூறலாம்.

யார் செய்தார்கள்! ஏன் செய்தார்கள் என்பது இன்னமும் சந்தேகத்துக்குரியதாகவும், மர்மமானதாகவும் விளங்கும் அனுராதபுரம் சம்பவத்தை நெடுந்தீவுக்கு ஒப்பிடமுடியாது;

டொலருக்கும், கென்றுக்கும் வழங்கப்பட்ட நஷ்டஈடு, அனுராதபுரத்துக்கும் உண்டு.

ஆனால் வல்வெட்டித்துறைக்கும், நெடுந்தீவுக்கும் அது கிடையாது.

தமிழ் உயிர் விலை கூடியது என்பதாலா, அல்லது மதிப்பற்றது என்பதாலா?

### சபையில் இணையமைச்சர் மிர்தா அறிவிப்பு

# பிரதமரின் பாதுகாப்பு ஜரூர்

# முழு நாட்டின் பிரதிநிதி அவர்

(புதுடில்லி)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கு உள்நாட்டிலும் அவர் வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் போதும் முழுமையான 'பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று லோக சபையில் தகவல்துறை இணையமைச்சர் ராம்நிவாஸ் மிர்தா தெரிவித்தார். பிரதம மந்திரியின் பாதுகாப்பு விடயத்தில் அரசு தன் பெரும் பொறுப்பினை உணர்ந்துள்ளது. நாடு முழுவதற்குமான பிரதிநிதியாக அவர் இருப்பதால் அவருக்கு இழைக்கப்படவிருந்ததாகக் கூறப்படும் தீங்கு குறித்து கவலை கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் சொன்னார். இக்கொலை முயற்சி விடயத்தில் உறுப்பினர்களின் கவலையைத் தாமும் பகிர்ந்து கொள்வதாகவும் அவர் சொன்னார். இச்சதிவேலையைக் கண்டு பிடிப்பதில் அமெரிக்கப் பெடரல் புலனாய்வுக் கழகம் காலதாமதமற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்காக அவர் பாரதத்தின் சார்பில் மன்பூர்வமான பாராட்டுத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்ட ரீதியாக உரிய நடவடிக்கைகளை அமெரிக்கா



மேற்கொள்ளும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் நடமாட்டம் குறித்துக் கண்காணிக்குமாறு பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளைப் பாரதம் கேட்டுக் கொண்ட போதிலும் அந்நாடுகள் அது குறித்து எவ்வித நடவடிக்கையுமே எடுக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பிட்ட நாடுகளிலுள்ள பாரதத் தூதரகங்கள் இந்த அசமந்தப் போக்கு குறித்து ஆட்சேபனை தெரிவித்தும்கூட அது பயனற்றுப் போயிற்று என்றும் திரு. மிர்தா சொன்னார்.

இது இவ்வாறு இருக்க, இக் கொலைச் சதி தொடர்பாக தலைமறைவாக இருந்து வரும் மேலும் இரு சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கு உலகு தழுவிய உஷார் நடவடிக்கைகளை அமெரிக்கப் பெடரல் புலனாய்வுக் கழகம் மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

## நிக்கரகுவா மீதான தடை; நீக்க கூட்டுக் கோரிக்கை

(லண்டன்)

நிக்கரகுவா மீதான வர்த்தகத்தடையை நீக்கி விடுமாறு இருபத்தைந்து லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டுள்ளன

நிக்கரகுவா மீது அமெரிக்கா விதித்துள்ள வர்த்தகத் தடையை உலகின் பல்வேறு நாடுகளும் கண்டித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியின் செயற்பாட்டைப் பொறுத்த வரையில் அவர் ஹிட்லருக்கு நிகரானவர் என நிக்கரகுவா ஜனாதிபதி திரு. டேனியல் ஒட்டேகா கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## குஜராத்தில் விபத்து

(புதுடில்லி)

குஜராத்தில் நிகழ்ந்த கோர விபத்து ஒன்றில் இருபத்து மூன்று பேர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## விபத்தில் சிக்கி தீயில் கருகி மடிவு

(பீக்கிங்)

தென் சீனவில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பஸ் ஒன்று ட்ரக் ஒன்றுடன் மோதியதில் இருபத்திரண்டு பேர் இறந்தனர். நாற்பத்தெட்டுப் பேர் காயமடைந்தனர்.

பெற்றோல் தாங்கி வெடித்ததால் அவர்கள் தீயில் கருகியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தி.மு.க. மறியல் போராட்டம்: சிறைச்சாலை நிறைகின்றது!

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசின் கவனத்தைத் தீவிரமாக ஈர்க்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாடு பூராவும் நடத்திவரும் மறியல் போராட்டத்தில் நேற்று முன்தினமும் ஐநூறு தொண்டர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைப் பதினைந்து நாள் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் செய்ய முற்பட்டதற்காகவே இவர்கள் கைதாகினர்.

## அமெரிக்க கண்காட்சிக்கு இந்து விக்கிரகமும் செல்லும்

(சென்னை)

அமெரிக்காவில் நடைபெறவுள்ள கண்காட்சி ஒன்றிற்குத் தமிழ்நாட்டிலிருந்து இந்து தெய்வ விக்கிரகங்களை அனுப்பிவைப்பதால் புனிதம் கெட்டுவிடப் போவதில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது;

இவ்வருடப் பிற்பகுதியில் நடைபெறவுள்ள இக்கண்காட்சிக்கு இவ்விக்கிரகங்கள் அனுப்பப்படுவதை எதிர்த்து சில இந்துக்கள் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

## "பெண்கள் மட்டுமே ஊழியர்"

(சென்னை)

சென்னையில் பெண்கள் மட்டுமே பணிபுரியும் இரு கூட்டுறவு வங்கிகள் நிறுவப்படவுள்ளன.

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் வெளியிட்டார்.

## எகிப்தில் இஸ்ரேலிய கொடி எரித்து பெரும் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

நிலப்பரப்புச் சம்பந்தமாக இஸ்ரேலும், எகிப்தும் நேரில் பேச்சுவார்த்தை நடத்த இணங்கியுள்ளன.

இப்பிரச்சினையின் எதிரொலியாக முந்நூறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கெய்ரோவில் இஸ்ரேலியக் கொடியைத் தீயிட்டுக் கொளுத்தித் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

சமுகநிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் குறிப்பிட்ட நிலப்பரப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென எகிப்து கோரிக்கை விடுத்துள்ளது.

## பூட்டான் மாநாடு வெற்றி இலங்கைப் பிரதிநிதி கருத்து

(புதுடில்லி)

பூட்டான் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதி எஸ்மண்ட் விக்கிரமசிங்க அம்மாநாட்டில் பாரதப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட வெளியுறவு இணையமைச்சர் குர்ஷித் ஆலம்கான் சகிதம் புதுடில்லி வந்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

அவர் புதுடில்லியில் நிருபர்களிடம் பேசுகையில், '' 'சாக்' மாநாட்டின் தீர்மானம் தொடர்பான இறுதி வாசகங்கள் இலங்கைக்கு முற்றிலும் ஏற்புடையனவாக இருந்தன'' என்றார்.

இம்மாநாடு மகத்தான வெற்றியாக அமைந்தது என அவர் வர்ணித்தார்.

மாநாட்டுத் திட்டங்கள் ஆர்வத்துடன் செயற்படுத்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஈழமுரசு

## அக்கரைப்பற்று தாக்குதலில் பதினெட்டு இளைஞர் மரணம்

அக்கரைப்பற்றில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை விசேஷ பொலிஸ் அதிரடிப்படையினர் தாக்கியதில் அதில் இருந்த பதினெட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பல தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இம்முகாமிலிருந்து பெருமளவு வெடிமருந்துகள், முகாம் அமைப்பதற்கான பொருட்கள் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இங்கு இடம்பெற்ற தாக்குதலொன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணமடைய நேர்ந்ததும் இரு பொலிஸார் காயமடைந்ததும் தெரிந்ததே.

**24 மணி நேரமாக அமைதி நிலவுகிறது:**

# தீவிரவாதிகள் வில்பத்துவில் மறைந்துள்ளனர்

# முப்படைகள் தீவிரமான தேடுதல் வேட்டையில்

(கொழும்பு)

அனுராதபுரத்தில் பொது மக்களையும் வில்பத்து வன விலங்குப் பகுதியில் கடமையில் இருந்த ஊழியர்களையும் படுகொலை செய்த தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் கூட்டாகத் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நேற்று அரசு தெரிவித்தது.

தீவிரவாதிகள் வில்பத்துப் பகுதியில் மறைந்திருக்கிறார்கள் என நம்பப்படுவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இருபத்திநான்கு மணித்தியாலங்களில் அநுராதபுரப் பகுதியில் எவ்வித சம்பவங்களும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை என்று இவ்வட்டாரங்கள் மேலும். தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

இத்தாக்குதலில் 146 பேர் மரணமானதும், அவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவதுடன், மரணச்சடங்கிற்கான செலவுகளையும் பொறுப்பேற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## திருநெல்வேலி சிவன்கோவில் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருநெல்வேலி சிவன்கோவில் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு விமரிசையாக நடைபெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 6மணி வரை பூங்காவன உற்சவம் நடைபெறும். விசேட மேளக்கச்சேரிகளுக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

### யாழ் வர்த்தகர்

—1ஆம் பக்கத் தொடர்

காரில் ஏற்றி வந்து தமது வீட்டில் இறக்கிவிட்டவர்கள், எவ்வித நிபந்தனையுமின்றித் தம்மை விடுவித்ததாக திரு. குமாரசாமி ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

### அனுராதபுரம்..

— 1ஆம் பக்கத் தொடர்

டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல; சிங்கள இனவெறி அரசாங்கத்துக்கு எதிரானதே எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புங்குடுதீவு,.

— 1ஆம் பக்கத் தொடர்

தாசன், பெமிஸ் எருக், ஆனைக்கோட்டை இரத்தினம் சரோஜா, பண்டத்தரிப்பு மோகன் துரைலக்ஷி (ஏழு மாதம்) ஆகியோரே ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டவர்.

## மேலும் ஒருவர் மரணம்

நெடுந்தீவு படகுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் நேற்று மேலும் ஒருவர் மரணமானார்.

மயிலிட்டியைச் சேர்ந்த ஜேசுநாயகம் (23) என்பவரே மரணமானவர்.

### நெடுந்தீவுச் சம்..

—1ஆம் பக்கத் தொடர்

பாபு (13), குமாரசாமி விநாயகம் (38), கந்தையா சதாசிவம் (ஆசிரியர்-65), சபாபதி தெய்வானை (68), ஞானப்பிரகாசம் தேவசகாயம் (42), தில்லைநாதன் (38), ஆ. கனகலிங்கம் (34), சடையர் கோவிந்தன் (46) இ. போ.ச. நடத்துனர்), சி. நாகேந்திரன் (கண்டு-32), பண்டத்தரிப்பு, குசலகுமாரி (28), சாந்தலிங்கத்தின் மகள் (ஒரு வயது), பண்டத்தரிப்பு அனுஷியா (23), எம். மணிவண்ணன் (14), ந. கந்தையா (24 இ.போ.ச), திருமதி செபமாலை கிருஷ்டி (40), இ. கனகம்மா (55), யாழ்ப்பாணம், எஸ் ஜேசுதாசன் (46), வேலுப்பிள்ளை புஸ்பராஜா (22), மாரியம்மா.

இடம் குறிப்பிடப்படாதவர்கள் யாவரும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களாவர்.

### சவான் தலைமை,,

— 1ஆம் பக்கத் தொடர்

கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரச்சினை பற்றி உண்மை நிலையை அறியவும், இப்பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூடிய வழிவகைகளை அறியவும் இவ்வாறான ஒரு சந்திப்பு உதவுமென முதல்வர் பிரதமரிடம் அப்போது எடுத்துக் கூறியதாக அறிவிக்கப்படுகிறது.

திரு. அந்தனி நிருபர்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரையில் ஒரு இலட்சம் அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகவும், இவர்களில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் எவ்வித உதவியுமில்லாதவர்கள் என்றும் கூறினர்.

பாடசாலைகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ளவர்களை, பாடசாலைகள் ஆரம்பமாகும் போது தூத்துக்குடி மண்டபம் போன்ற இடங்களில் குடியேற்ற புதிய முகாம்களை அமைக்க ஐந்து கோடி ரூபாவை ஒதுக்குமாறு மத்திய அரசிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### நேற்றைய…

—1ஆம் பக்கத் தொடர்

அடுத்து யாழ்நகரிலுள்ள கடைகள் நேற்று ஒற்றைக் கதவிலேயே வியாபாரத்தை மேற்கொண்டன. நண்பகலுக்குப் பின்னர் பெரும்பாலான கடைகளும் மூடப்பட்டுவிட்டன,

பஸ் சேவைகள், பாடசாலைகள் எல்லாம் வழமைபோல் நடைபெற்றனவாயினும், சில பாடசாலைகள் முற்றாக மூடப்பட்டிருந்தன.

## இடமாற்றம்

(மிருசுவில்)

நுவரெலியா மாவட்டத்தில் பணிபுரிந்து பயிற்றப்பட்ட ஆசிரியரான திரு. ச. குலசேகரம் உசன் இராமநாதன் மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்

### சுடப்பட்டு...

—1ஆம் பக்கத் தொடர்

வீடொன்றில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் நேற்று முன்தினமிரவு சுடப்பட்டு மரணமானார்.

### புகையிரத நிலைய..


முப்பத்து நான்கு பேர் நேற்று தனியார் வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

அனுராதபுரம் 'கன்வென்ட்' ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ் டாக்டர்கள் உட்பட வேறு சில அரசாங்க ஊழியர்களையும் இங்கு பாதுகாப்பாக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

## கனடாவில் வேலைவாய்ப்பு தூதரக விளக்கம்

கனடாவில் வேலைவாய்ப்பு இருப்பதாக சில தனிநபர்கள் விடுக்கும் அறிவித்தல்களை நம்பவேண்டாமென்றும், கனடாவில் வேலை பெற்றுக்கொடுப்பதற்கு இங்கு எவருக்கும் கனடா அரசு அனுமதி வழங்கவில்லையென்றும் இலங்கையிலுள்ள தூதரகத்தின் குடிவரவுக்கு பொறுப்பான முதலாவது செயலாளர் கொலின் கப்பில்ஸ் நேற்று அறிவித்தார் இதுதொடர்பாக வெளிவரும் விளம்பரங்கள் ஆதாரமற்றவை என்றும் குறிப்பிட்ட அவர், அங்கு வேலை பெறுவதற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லைஎன்றும் சுட்டிக்காட்டினார்.

## மரண அறிவித்தல்



### திரு. எஸ். ஜேசுதாசன்

நெடுந்தீவைச் சேர்ந்தவரும், யாழ் மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள பொறுப்பதிகாரியுமாகிய திரு. எஸ். ஜேசுதாசன் 15-05-1985 ல் அகால மரணமானார். அன்னார் அடைக்கலமேரியின் அன்புக் கணவரும், காலம் சென்ற சுவைக்கின் தம்பதிகளின் புதல்வனும், மரியதாஸ் (நீர்கொழும்பு), திருமதி மரியம்மா பெர்னண்டோ (ஆசிரியை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்), திருமதி அன்னம்மா அல்பிறட் (சின்னமணி நெடுந்தீவு) ஆகியோரது அன்புச் சகோதரனும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில வித்தியாலயத்தைச் சேர்ந்த அன்ரனி றூபா, வேக்ளி செல்வராணி, புனித மாட்டினார் குருமடத்தைச் சேர்ந்த நிர்மலராஜ், யா/புனித சம்பத்தரசியார் கல்லூரியைச் சேர்ந்த தெய்வேந்திரராஜ், ஜெயானந்தராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும். நெடுந்தீவு மத்தி செல்லர் என அழைக்கப்படும் லோறன்ஸ் சவரிமுத்து, மாசில்லாமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், தியாகராஜா, மகேஸ்வரி, கொலங்றிக்கா, பிறேமா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 17-05-1985 வெள்ளிக்கிழமை இல. 69, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு பிற்பகல் 2-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல் : செ. குணநாயகம்
யாழ் சிறைச்சாலை

## நன்றி! நன்றி!

இம்மாதம் 7ம் திகதி கடத்திச் செல்லப்பட்ட எங்கள் அப்பா (எஸ். வி. முருகேசு) நேற்றிரவு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரை விடுவிப்பதற்காக சகல வழிகளாலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியை திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை அகால மரணமடைந்துவிட்டார். 17-05-1985 வெள்ளிக்கிழமை நெடுந்தீவு மேற்கில் அன்னாரது இல்லத்தில் ஈமக் கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இ. வேலுப்பிள்ளை (இ. த. ஆசிரியர்)
மக்கள், மருமக்கள்,

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 17-05-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: தொலைபேசி: 23326.